# ஒரு நிர்ணயகரமான தருணத்தில் நிற்கும் இலங்கை: பொறுப்புக் கூறுதல், நிறுவன மற்றும் பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்கள் என்பவற்றில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென ஐ நா அறிக்கை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது

ஜெனீவா (செப்டம்பர் 6, 2022) - இலங்கையின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கென ஒரு தேசிய உரையாடலைத் துவக்கி வைக்க வேண்டுமென இன்று வெளியிடப்பட்ட ஓர் ஐ நா அறிக்கை கேட்டுக்கொள்கிறது. கடந்த காலத்தில் இடம்பெற்ற அத்துமீறல்கள் மீண்டும் இடம்பெறுவதனைத் தடுக்கும் பொருட்டு பொறுப்புக் கூறல் மற்றும் விரிவான நிறுவனரீதியிலான சீர்திருத்தங்கள் என்பன மேற்கொள்ளப்பட வேண்டுமென அது கேட்டுக் கொள்கிறது.

இலங்கை அதன் அரசியல் வாழ்க்கையில் ஒரு நிர்ணயகரமான தருணத்தில் இருந்து வருவதுடன், அனைத்துச் சமூகங்களினதும், அனைத்துத் தரங்களைச் சேர்ந்த மக்களினதும் மனித உரிமைகள் மீது மிக மோசமான தாக்கத்தையெடுத்து வந்திருக்கும் பாரதூரமான பொருளாதார நெருக்கடி ஒன்றுக்குள் சிக்கியுள்ளது என்ற விடயத்தை இந்த அறிக்கை ஏற்றுக்கொள்கிறது. இது அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த இலங்கையர்கள் விரிவான சீர்திருத்தங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் என்பன தொடர்பான பரவலான கோரிக்கைகளை முன்வைக்கும் நிலையைத் தூண்டியிருப்பதுடன், நாட்டை ஒரு புதிய பாதையில் நெறிப்படுத்திச் செல்வதற்கான ஒரு புதிய வாய்ப்பை அரசாங்கத்திற்கு வழங்குகின்றது.

எவ்வாறிருப்பினும், நிலைத்து நிற்கக்கூடிய விருத்தி நிலைமைகள் ஏற்பட வேண்டுமானால் பொருளாதார நெருக்கடிக்குப் பங்களிப்புச் செய்திருக்கும் அடிச்சரடான காரணிகளை அங்கீகரித்து, கவனத்திலெடுப்பது அத்தியாவசியமானதாகும். இக்காரணிகள் கடந்த கால மற்றும் தற்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வேரூன்றியிருக்கும் தண்டனை விலக்குரிமை, பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் பரவலாக வியாபித்திருக்கும் ஊழல் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன.

‘‘தற்போதைய சவால்களைக் கவனத்தில் எடுப்பதற்கும், கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறுவதனைத் தடுப்பதற்கும் அடிப்படை மாற்றங்கள் அவசியமாக இருந்துவரும்’’ என மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் அறிக்கை குறிப்பிடுகின்றது.

கொடூரமான பாதுகாப்புச் சட்டங்களின் பிரயோகம் மற்றும் அமைதியான எதிர்ப்புச் செயற்பாடுகளை ஒடுக்குதல் என்பவற்றை அரசாங்கம் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும், இராணுவமயமாக்கலை நோக்கிய நகர்வை திசைதிருப்பி, பாதுகாப்புத் துறை சீர்த்திருத்தம் மற்றும் தண்டனை விலக்குரிமை என்பவற்றை முடிவுக்கு கொண்டு வருதல் என்பன தொடர்பான கடப்பாட்டினைப் புதுப்பித்து, அவற்றுக்கு செயல் வடிவம் கொடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறது.

பொது மக்களின் பாரிய எதிர்ப்புக்களுக்கு எதிர்வினையாற்றும் விடயத்தில் அண்மைக்காலத்தில் பாதுகாப்பு படைகள் குறிப்பிடத்தக்க அளவிலான தன்னடக்கத்துடன் நடந்து கொண்டிருக்கும் அதே வேளையில், அதனையடுத்து அரசாங்கம் ஒரு கடும் போக்கிலான அணுகுமுறையைப் பின்பற்றியுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஒரு சில மாணவ தலைவர்கள் கைது

செய்யப்பட்டிருப்பதுடன், அமைதியான எதிர்ப்புச் செயற்பாடுகள் வன்முறையுடன் கூடிய விதத்தில் ஒடுக்கப்பட்டுள்ளன. அதேபோல நாட்டின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பெருமளவுக்கு இராணுவமயமாக்கப்பட்ட ஒரு சூழ்நிலையும், ஓர் உன்னிப்பான கண்காணிப்புக் கலாசாரமும் தொடர்ந்து நிலவி வருகின்றன.

நிலைமாறு கால நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன தொடர்பாக அனைத்துமடங்கிய, பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட ஓர் உத்தியை மீண்டும் துவக்கி வைக்கவேண்டுமெனவும், இதுவரையில் நிறைவேற்றப்படாதிருக்கும் கடப்பாடுகளை அமுல் செய்வதற்கென கால அட்டவணையுடன் கூடிய ஒரு திட்டத்துடன் இது முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் இந்த அறிக்கை கேட்டுக்கொள்கிறது. நம்பகமான உண்மையைக் கண்டறியும் பொறிமுறை ஒன்றையும், குறிப்பிட்ட நோக்கத்திற்கென விசேட நீதிமன்றம் ஒன்றையும் ஸ்தாபித்தல் தொடர்பான படிமுறைகளையும் இது உள்ளடக்க வேண்டும். அனைத்து விதமான பொறுப்புக்கூறல் மற்றும் நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை வடிவமைத்து, அமுல் செய்யும் விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு மையமான வகிபங்கு வழங்கப்படுதல் வேண்டும்.

2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான உண்மையைக் கண்டறிவதில் போதிய அளவில் முன்னேற்றம் ஏற்படாதிருக்கும் விடயம் தொடர்பாகக் கரிசனை தெரிவிக்கும் இந்த அறிக்கை, விசாரணைகளை மேலும் முன்னெடுப்பதற்கென சர்வதேச உதவியுடனும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடைய பிரதிநிதிகள் ஆகியோரின் முழுமையான பங்கேற்புடனும் இது தொடர்பாக சுயாதீனமான, வெளிப்படையான ஒரு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றது.

‘‘ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கை அரசு பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை நிகழ்த்தியிருக்கும் நபர்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கும், உண்மை, நீதி மற்றும் இழப்பீடு என்பவற்றுக்கான பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் வினைத்திறன் மிக்க நிலைமாறு கால நீதிச் செயன்முறை ஒன்றை முன்னெடுத்துச் செல்லும் விடயத்கில் தொடர்ந்தும் தோல்வி கண்டுள்ளது’’.

அதற்குப் பதிலாக, அந்த அரசாங்கங்கள் பொறுப்புக்கூறல் தொடர்பாக அரசியல் இடையூறுகளை உருவாக்கியிருப்பதுடன், போர்க்குற்றங்கள் நிகழ்த்தியதாக நம்பகமான விதத்தில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஒரு சில இராணுவ அதிகாரிகளை முன்நிலைப்படுத்தி, அரசாங்கத்தின் உயர் மட்டங்களுக்குள் உள்வாங்கி உள்ளன’’.

தேசிய மட்டத்தில் பொறுப்புக்கூறல் தொடர்பாக ஒரு முன்னேற்றம் இல்லாதிருக்கும் நிலையில், பொறுப்புக்கூறல் முயற்சிகளில் ஏனைய அரசுகள் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டுமென இந்த அறிக்கை கேட்டுக்கொள்கிறது. இலங்கையில் நிகழ்த்தப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக சர்வதேச சட்டத்தின் கீழ் விசாரணைகளை நடத்தி, வழக்குத் தொடுப்பதற்கென பிராந்தியத்திற்கு வெளியிலான மற்றும் அகிலம் தழுவிய நியாயாதிக்க வழிமுறைகளை இந்த அரசுகள் பயன்படுத்திக் கொள்வதையும் இது உள்ளடக்கும்.

அது தவிர, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தொடர்பான பாரதூரமான மீறல்கள் அல்லது சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் மோசமான மீறல்கள் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருந்து வந்திருப்பதாக நம்பகமான விதத்தில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களை இலக்கு வைத்து மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கும் விடயத்தை அரசுகள் கவனத்திலெடுக்க வேண்டுமெனவும் அது வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தின் பிரகாரம் பொறுப்புக்கூறல் தொடர்பாக மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகம் (OHCHR) ஈட்டியிருக்கும் முன்னேற்றத்தையெடுத்து விளக்கும் இந்த அறிக்கை, ஆணையாளர் அலுவலகத்தின் ஆற்றல் மேலும் பலப்படுத்தப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முடிவு

இது தொடர்பாக மேலும் தகவல்கள் மற்றும் ஊடக வேண்டுகோள்கள் என்பன தொடர்பாக தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:

ஜெனீவாவில்

Ravina Shamdasani - + 41 22 917 9169 / ravina.shamdasani@un.org or

Liz Throssell + 41 22 917 9296 / elizabeth.throssell@un.org or

Jeremy Laurence +  +41 22 917 9383 / jeremy.laurence@un.org or

Marta Hurtado - + 41 22 917 9466 / marta.hurtadogomez@un.org